**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 298/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Tmt. Padma |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of March, 2025.

**(A1 to A6 present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொப்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்.சி. ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். அவர்கள் அனைவரும் வன்னியர் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். 2022ம் வருடம் தேதி

ஞாபகமில்லை. என் பேரன் அஜய்க்கும் பழனி என்பவருக்கும் காலை 9.00 மணியளவில் தகராறு ஏற்பட்டது. எங்களுக்கு அது தெரியாது. என் மகன் முனுசாமி என் வீட்டில் படுத்திருந்தார். நான் சமையல் செய்து கொண்டிருந்தேன். 10 பேர் வந்து முனிசாமியை மற்றும் என் மகள் அஞ்சலாட்சி, என் பேரன் ரிஷிகாந்த் மற்றும் என்னையும் அடித்தார்கள். என்னை இடுப்பின் மேல் எட்டி உதைத்து என் ஜாக்கெட்டை கிழித்தார்கள். வீட்டை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்றும் என்னை பற தெவிடியா என்று கூறினார்கள். முனுசாமியை உருட்டு கட்டையால் அடித்தார்கள். நாங்கள் மணவாளநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் இந்நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரண இல்லை என்று கூறுகிறார்.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 298/2023**

| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Anjalatchi |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of March, 2025.

**(A1 to A6 present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொப்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்.சி. ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் வன்னியர் இனத்தை சேர்ந்தவர்கள். 14/02/2022 இன்று என் அண்ணன் மகன்

அஜய் என்பவருக்கும் ஆஜர் எதிரி பழனி என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது. அதன்காரணமாக எங்கள் வீட்டிற்கு வந்து என்னையும், என் பெரிய மகன் ரிஷிகாந்த், என் அம்மா பத்மா, என் அண்ணன் முனுசாமி ஆகியோர்களை அடித்து, பற தெவிடியா பசங்க என்று அசிங்கமாக திட்டினார்கள். என்னை காதில் அடித்தார்கள். என் பெரிய மகனையும் பற தெவிடியா பசங்க என்று அசிங்கமாக திட்டினார்கள். இன்னும் 10 நிமிடத்தில் வருவேன் வீட்டிலிருந்தால் வீட்டை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவோம் என்று பழனி கூறினார். என் அண்ணன் முனுசாமியை அடித்தார்கள். கத்தி, கொம்பை எடுத்துவந்து எங்களை சாகடித்துவிடுவோம் என்று கூறினார்கள். என் அம்மாவை அடித்தார்கள். எங்களை சாகடித்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரண இல்லை என்று கூறுகிறார்..

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.